வகுப்பு : 12

தேர்வு எண் | | | | | | |

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2024

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 50

### பகுதி – அ

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (பலவுள் தெரிக) 8x1=8

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்.
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னோர் இலாத தமிழ்!" – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்
அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர்மோனை, சீர் எதுகை
இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடி மோனை

3. உலகப் புவிநாள் எது?
அ) ஜூன் 5 ஆ) ஏப்ரல் 22 இ) மார்ச் 20 ஈ) மே 15

4. பொருத்துக.
அ) குரங்குகள் – 1) கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) விலங்குகள் – 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ) பறவைகள் – 3) குளிரால் நடுங்கின
ஈ) பசுக்கள் – 4) மேய்ச்சலை மறந்தன
அ) 1, 3, 4, 2 ஆ) 3, 4, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

5. கூதிர்ப் பருவம் என்பது -------- மாதங்கள்.
அ) ஐப்பசி, கார்த்திகை ஆ) புரட்டாசி, ஐப்பசி
இ) கார்த்திகை , மார்கழி ஈ) மாசி, பங்குனி

6. "இவற்றை வாயிலுக்கே சென்று, இன்முகத்துடன் வரவேற்பாயாக" என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது எதனை?
அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

7. வியர்வை வெள்ளம், தாழ்கடல் – இவற்றின் இலக்கணக்குறிப்பு முறையே --------
அ) பண்புத்தொகை, வினைத்தொகை ஆ) உருவகம், தொழிற்பெயர்
இ) உருவகம், வினைத்தொகை ஈ) உரிச்சொற்றொடர், இன்னிசை அளபெடை

8. தமிழில் திணைப்பாகுபாடு --------- அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

### பகுதி – ஆ

#### பிரிவு– 1

II. அ) எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க. 3x2=6

9. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
10. பசுமைக்குடில் வாயுக்கள் எவை?
11. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
12. சங்ககாலத் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?
13. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?

#### பிரிவு–2

ஆ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

14. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அலை, அளை, அழை (அல்லது) கலம், களம்

15. உறுப்பிலக்கணம் தருக. பொலிந்தான் (அல்லது) வியந்து



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

16. புணர்ச்சி விதி தருக.
புதுப்பெயல் (அல்லது) வானமெல்லாம்

17. தமிழாக்கம் தருக.
அ) A new language is a new life ஆ) The limits of my language are the limits of my world

18. பிழைகளைத் திருத்தி எழுதுக.
அ) காளையில் பூத்த மல்லிகை மணம் வீசியது ஆ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

பகுதி – இ

பிரிவு– 1

III. அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x4=12

19. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.

20. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

21. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

22. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

பிரிவு– 2

ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

23. பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

24. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
அ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்
ஆ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்
இ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வில் உயரலாம்
ஈ) குமரன் வீடு பார்த்தேன்

25. கீழ்க்காணும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தோடு ஏற்புடைய நயங்கள் நான்கினை எழுதுக.

*பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி*
*பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க*
*ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்*
*உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?*
*கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று*
*கம்பனோடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்*
*தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட*
*தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்*

– நாமக்கல் கவிஞர்

26. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.
அ) முன் ஆ) தானே இ) கொண்டு ஈ) விட்டான்

பகுதி – ஈ

IV. ஏதேனும் ஒன்றுக்கு விடை தருக. 1x6=6

27. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

28. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது – எவ்வாறு? விளக்குக.

29. பாரதியின் கடிதங்கள் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

V. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 1x4=4

30. "குகனோடும் ஐவர்" – எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com